**செய்தி வெளியீடு எண்: 878** **நாள்: 07.10.2010.**

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை , சென்னை 600 106.

2010–2011 ஆம் கல்வியாண்டுக்குரிய ஒருங்கிணைந்த மருந்தாளுநர் மற்றும் நர்சிங் தெரபி பட்டயப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு, சென்னை அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் கீழ்க் கண்டவாறு நடைபெறும்.

| நாள் மற்றும் கிழமை | படிப்பு | நேரம் | |
|---|---|---|---|
| | | **முற்பகல்** | **பிற்பகல்** |
| **13.10.2010**<br>புதன் | நர்சிங்தெரபி மற்றும் ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப்படிப்பு | **முற்பகல் 10.00 மணி**<br>அனைத்து சிறப்பு பிரிவினர் பிரிவில் விண்ணப்பித்தவர்கள் மட்டும் | -------- |
| **13.10.2010**<br>புதன் | நர்சிங்தெரபி | **முற்பகல் 11.00 மணி**<br>ஆண் விண்ணப்பதாரர்கள் முட்டும் | **பிற்பகல் 2.00 மணி**<br>பெண் விண்ணப்பதாரர்கள் தர வரிசை எண் 1 முதல் 178 முடிய |
| **14.10.2010**<br>வியாழன் | ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு | **முற்பகல் 10.00 மணி**<br>ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டும் | **பிற்பகல் 2.00 மணி**<br>பெண் விண்ணப்பதாரர்கள் தர வரிசை எண் 1 முதல் 212 முடிய |

முற்பகல் கலந்தாய்விற்கு வரவேண்டியவர்கள் காலை 9.00 மணியளவிலும், பிற்பகல் கலந்தாய்விற்கு வரவேண்டியவர்கள் மதியம் 1.00 மணியளவிலும் கலந்தாய்வு கூடத்தில் அனைத்து அசல் கல்விச் சான்றிதழ்களுடன் இருக்க வேண்டும்.

தகுதியான மாணவர்கட்கு தனித்தனியே கலந்தாய்வு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் கிடைக்கப் பெறாத தகுதியான மாணவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி அவரவர்க்குரிய கலந்தாய்வில் அனைத்து அசல் கல்விச் சான்றிதழ் மற்றும் உரிய கட்டணத்துடன் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப் படுகிறார்கள். மேலும் விவரங்களை www.tn.health.org என்ற இணைய தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**